கண்காணிப்புப்பொறியாளர், பொபது, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருவாரூர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: பொறி.கே.பிரான்,
கண்காணிப்புப்பொறியாளர்,பொபது.,

**செயல்முறை ஆணை எண்: 1927 / 2024/ நி.உ.2 /நாள்: 04.11.2024.**

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் பணி நியமனம் - **செல்வி.S.கௌசல்யா இளநிலை உதவியாளர் -** இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து தகுதிகாண்பருவம் துவக்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்: 1970/PSD-D2/2023/நாள்: 31.08.2023.
2. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) நீர்வளத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்.3(3)/35336/2023/நாள்:22.09.2023.
3. முதன்மை தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொ.ப.து., சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ். 2(1)/022209/2023/ நாள்: 30.11.2023.
4. தலைமைப்பொறியாளர் (கட்டடம்), பொபது., திருச்சி மண்டலம், திருச்சி செயல்முறை ஆணை எண். எஸ்.1(2)/ 6842-2/ 2023/ நாள்: 05.12.2023.
5. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். நி.உ.2/1927/2023/ நாள்: 07.12.2023.

*****

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு மூலம் தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதியைச் சார்ந்த நிலை-8 ரூ.19,500 - ரூ.71900, என்ற ஊதிய ஏற்றமுறை கொண்ட இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை(2)-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர் நீ.ஆ.து., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களது செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ன் படி தற்காலிக அடிப்படையில் இவ்வலுவலகத்திற்கு பணியமர்வு செய்யப்பட்ட **செல்வி.S.கௌசல்யா** (பிறந்த தேதி:07.02.1998) இவ்வட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பதவியில் 08.12.2023 முற்பகல் பணியேற்றார். அன்று முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

3. இவர் அரசுப் பணியில் பணியாற்ற முழு உடல் தகுதி பெற்றுள்ளார் என தோகமலை, அரசு மருத்துவமனை உதவி அறுவை சிகிச்சை நிபுணரால் (பதிவுஎண்:79689) மருத்துவ தகுதி சான்று வழங்கப்பட்டுள்ளது. (பணிப்பதிவேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது)

(த.பி.பா)

4. அவருக்கு எதிரே ஒழுங்கு நடவடிக்கையோ, குற்றப்பத்திரிக்கையோ நிலுவையில் ஏதுமில்லை. அவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை.

5. அவரது தாய் மொழி தமிழ் ஆகும்.

6. அவர் இளநிலை உதவியாளர் பதவிக்குரிய அனைத்து கல்வித் தகுதிகளையும் பெற்றுள்ளபடியாலும், தாய்மொழி தமிழ் என்பதாலும், அரசுப்பணிக்குரிய மருத்துவ உடல் நலத் தகுதியுடையவராய் உள்ளபடியாலும், தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ல் உள்ள பணி விதி 28(1)-ன் கீழ் இவரது பணியை இளநிலை உதவியாளர் பதவியில் அவர் முதன் முதலாக இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 08.12.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும் அந்நாள் முதல் தொடர்ந்த மூன்றாண்டுகளுக்கு உட்பட்ட இரண்டாண்டுகால தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணை வழங்கப்படுகிறது.

7. அவர் தகுதிகாண் பருவகாலத்தில் பொதுப்பணித்துறையால் நடத்தப்படும் அலுவலக நடைமுறைதேர்வு கணக்கு தேர்வு பாகம் I-ல் கலந்துகொண்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

8. அவர் தகுதிகாண் பருவகாலத்தில் (தற்செயல் விடுப்பு மற்றும் மதச் சார்பு விடுப்பு நீங்கலாக) வேறு எவ்வித விடுப்பு துய்த்தாலும் அதற்கேற்ப தகுதிகாண் பருவம் நிறைவு நாள் தள்ளிப்போகும் என தெரிவிக்கப்படுகிறது

9. இந்த பணிவரன்முறை மாண்புமிகு சென்னை, உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளைக்குரிய நீதி மன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்கின் தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என்ற நிபந்தனையுடன் **செல்வி.S.கௌசல்யா,** இளநிலை உதவியாளருக்கு இவ்வலுவலகத்தில் பணியேற்ற நாளாகிய 08.12.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து தகுதிகாண்பருவம் துவக்கி வைத்து ஆணை வழங்கப்படுகிறது.

04/11/24.

கண்காணிப்புப்பொறியாளர், பொ.ப.து.,
கட்டட(க&ப)வட்டம், திருவாரூர்.

04.11.24

பெறுநர்:
**செல்வி.S.கௌசல்யா,**
**இளநிலை உதவியாளர்,பொ.ப.து.,**
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்,
திருவாரூர்

நகல்: கோப்பிற்கு

நகல்: பணிப்பதிவேட்டிற்கு

உபரிநகல் - 1.